1997 அக்டோபர் 14] [கலைஞர் மு. கருணாநிதி]

மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை 27 - ஊரக வளர்ச்சி" என்ற தலைப்பின்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

22. 1997-98 ஆம் ஆண்டிற்கு, மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண உதவித் திட்டத்திற்கு கூடுதலாக ரூபாய் 21 கோடி 15 இலட்சம் அரசு அனுமதி வழங்கியுள்ளது. இத்தொகை, துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை 29 - சமூக நலன்" என்ற தலைப்பின்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

23. முடமானவர்களைத் திருமணம் செய்து கொள்ளும் சாதாரணமான நபர் ஒவ்வொருவருக்கும் ரூ. 5,000 வீதம் 145 நபர்களுக்கு உதவித் தொகை வழங்குவது தொடர்பாக அரசு, ரூபாய் 7 இலட்சத்து 25 ஆயிரம் அனுமதித்துள்ளது. இத்தொகை, துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை 29 - சமூக நலன்" என்ற தலைப்பின்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

24. தற்போது நடைமுறையிலுள்ள பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தை ஒரு பெண் குழந்தை மட்டும் பயனடையும் வரைமுறையை திருத்தியமைத்து இரு பெண் குழந்தைகள் பயனடையும் வகையில் விரிவாக்க அரசு முடிவு செய்துள்ளது. இதற்கு கூடுதலாக ரூபாய் 4 கோடி 5 இலட்சம் அரசு அனுமதித்துள்ளது. இத்தொகை துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை 29 - சமூக நலன்" என்ற தலைப்பின்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

25. இந்திய விடுதலைப் பொன் விழா ஆண்டையொட்டி சமத்துவபுரம் என்ற பெயரால் 50 இடங்களில் குடியிருப்புகளை நிறுவ அரசு முடிவு செய்துள்ளது. இதன்படி ஒவ்வொரு குடியிருப்பிலும் அனைத்து சமூகத்தினரும் ஒற்றுமையாக வாழும் வகையில் 100 குடும்பங்களுக்கு அரசு, மானியத்தோடு எல்லா வசதிகளோடு வீட்டு வசதி செய்து கொடுக்கும். இதற்காக அரசு ரூபாய் 5 கோடி முதற்கட்டமாக அனுமதித்துள்ளது. இத்தொகை துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை 30 - பட்டியல் பழங்குடியினர், பட்டியல் சாதியினர் முதலியோர் நலன்" என்ற தலைப்பின் கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

26. வறுமைக் கோட்டிற்கு கீழே வாழும் ஏழைகளுக்கு வீட்டுமனை வழங்கும் திட்டத்தை அனைத்து பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் முன்னேறிய வகுப்பினருக்கும் அரசு நீட்டியுள்ளது. இதற்காக கூடுதலாகத் தேவைப்படும் ரூபாய் 16 கோடி துணை மதிப்பீடுகளில்